ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2108/72 - 2019 පෙබරවාරි මස 02 වැනි සෙනසුරාදා - 2019.02.02

*2108/72 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

### ஊவா மாகாண மாகாண சபை

ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்படும் நியமனம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 13 ஆம் திருத்தத்தின் 154ஊ ஆம் பிரிவின் (5) ஆம் உப பிரிவின் கீழ் ஊவா மாகாண ஆளுநர் சனாதிபதி சட்டத்தரணி மார்ஷல் பெரேரா ஆகிய எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நியமனத்தைச் செய்துள்ளேன் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

ஊவா மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம், நன் நடத்தையும் சிறுவர் பாதுகாப்பும், மகளிர் விவகாரம் மற்றும் சமூக நலன்புரி தொடர்பான அமைச்சர் கௌரவ அனுர ரவீந்திர விதானகமகே அவர்கள்

ஊவா மாகாண வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கூட்டுறவு விவகாரம் மற்றும் தமிழ்க் கல்வி (முஸ்லிம் பாடசாலைகள் தவிர்ந்த) தொடர்பான அமைச்சர் கௌரவ அகலன் செந்தில் தொண்டமான் முத்துவிநாயகம் அவர்கள், 2019.01.19 ஆந் திகதி முதல் 2019.01.22 ஆந்திகதி வரை வெளிநாடு செல்வதால் 2019.01.19 ஆந் திகதி முதல் அவர் மீண்டும் இலங்கைக்கு வருகை தரும் வரை மேற்குறிப்பிட்ட அமைச்சின் அமைச்சராக பதிற் கடமையாற்ற.

சனாதிபதி சட்டத்தரணி மார்ஷல் பெரேரா,
ஊவா மாகாண ஆளுநர்.

ஊவா மாகாண ஆளுநரின் அலுவலகம்,
2019, சனவரி 18.

02-638/1



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்படும் நியமனம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 13 ஆம் திருத்தத்தின் 154ஊ ஆம் பிரிவின் (4) மற்றும் (5) ஆம் உப பிரிவுகளின் கீழ் ஊவா மாகாண ஆளுநர் சனாதிபதி சட்டத்தரணி மார்ஷல் பெரேரா ஆகிய எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நியமனத்தைச் செய்துள்ளேன் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

ஊவா மாகாண விளையாட்டு, இளைஞர் விவகாரம், சுற்றுலாத்துறை, போக்குவரத்து, கலாசாரம் மற்றும் நெசவுக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் தொடர்பான அமைச்சர் கௌரவ பாலகே சாலிய சுமேத டி சில்வா அவர்கள்

ஊவா மாகாண முதலமைச்சர் மற்றும் நிதியும் திட்டமிடலும், சட்டமும் சமாதானமும், கல்வி (தமிழ் பாடசாலைகள் தவிர்ந்த), மாகாண உள்ளூராட்சி, மின் சக்தியும் வலு சக்தியும், நிர்மாணத்துறை, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் காணி தொடர்பான அமைச்சர் கௌரவ சாமர சம்பத் தசநாயக அவர்கள், 2019.01.26 ஆந் திகதி முதல் 2019.01.30 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால் 2019.01.26 ஆந் திகதி முதல் அவர் மீண்டும் இலங்கைக்கு வருகை தரும் வரை மேற்குறிப்பிட்ட அமைச்சின் அமைச்சராக பதிற்கடமையாற்ற.

சனாதிபதி சட்டத்தரணி மார்ஷல் பெரேரா,
ஊவா மாகாண ஆளுநர்.

ஊவா மாகாண ஆளுநரின் அலுவலகம்,
2019, சனவரி 17.

02-638/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.